# ஐசோடோப் புற்று நோய் சிகிச்சை: ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனைக்கு அனுமதி

**சென்னை, ஏப். 6:** ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ மையத்துக்கு உயர் அளவு ஐசோடோப் புற்றுநோய் சிகிச்சைக்கு அணுசக்தி வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

இதுகுறித்து ராமச்சந்திரா மருத்துவ மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தைராய்டு மற்றும் நாளமில்லா சுரப்பிகளில் ஏற்படும் புற்றுநோய்க்கு இந்த ஐசோடோப் மூலம் சிறப்பான சிகிச்சை அளிக்கலாம். ஆனால் இவை புற்றுநோய் திசுக்களை அழிக்கும் மிகுந்த அளவிலான கதிரியக்கத்தைக் கொண்டிருப்பதால் இதனை கையாள்பவர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தலாம். இதனைத் தடுக்கும் வகையில் ஒழுங்குமுறை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தொடர் கண்காணிப்பின் மூலம் அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் அனுமதி வழங்கி வருகிறது.

அணுசக்தி பரிசோதனை மற்றும் குறைந்த அளவு ஐசோடோப் பயன்பாடு ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ மையத்தில் 1995-இல் இருந்தே செயல்பட்டு வருகிறது. தற்போது உயர் அளவு ஐசோடோப் சிகிச்சைக்கு அனுமதி கிடைத்ததன் மூலம், ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ மையத்தில் புற்றுநோய்க்கான அணுசக்தி மற்றும் பெட்சிடி ஸ்கேன்கள் போன்ற பரிசோதனைகளும் மருத்துவ அறுவை சிகிச்சை மற்றும் கதிரியக்க சிகிச்சை என பல்வேறு வசதிகளை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.